முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.6.2025) முகாம் அலுவலகத்தில், பெரம்பூர் தெற்கு பகுதி 45வது வட்ட கழக செயலாளர் ஜி. மாரிமுத்து – சங்கீதா ஆகியோரின் மகன் விக்னேஷ் (எ) ஸ்டாலின் – தர்ஷினி ஸ்ரீமதி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர், பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க. ஜெயராமன், மாவட்டத் துணை செயலாளர் கமலக்கண்ணன், கழக நிருவாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.6.2025) முகாம் அலுவலகத்தில், 9வது வார்டு கிளை செயலாளர், எம். ஜி. சாமிநாதன் மகன் சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் முனைவர் எஸ். நவீன்குமார் – மோனிஷா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் கே. கணபதி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் திருமதி ரேகா பிரியதர்ஷினி, முனைவர் சு. ஆனந்தராஜா, கழக நிருவாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

மோடி தலைமையிலான ஆட்சியில்

விலைவாசி உயர்வால், நாட்டு மக்கள் தத்தளிப்பு!

எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி விமர்சனம் !

புதுடெல்லி, ஜூன் 7- மக்களவை எதிர்க் கட்சித்தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதி வில், கடந்த ஆண்டில் இருசக்கர வாகன விற் பனை 17 சதவீதமாக வும், கார் விற்பனை 8 புள்ளி 6சதவீதமாகவும் குறைந்துள்ளது.

இதேபோன்று, கைப் பேசிகளின் சந்தை 7 சதவீதம் குறைந்துள்ள தாக கூறியுள்ளார். மறு புறம் செலவுகள் மற் றும் கடன்கள் இரண் டும் தொடர்ந்து அதி கரித்து வருகின்றன. வீட்டு வாடகை, உள் நாட்டு பணவீக்கம், கல் விச்செலவுகள், எல் லாமே விலை உயர்ந்து வருவதாக குற்றம் சாட் டியுள்ளார்.

இவை அனைத்தும் வெறும் எண்கள் அல்ல. இவை ஒவ் வொரு சாதாரண இந்தி யனும் தத்தளிக்கும் பொருளாதார அழுத்தத் தின் யதார்த்தங்கள் என்று ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு இந்திய ருக்கும் வேலை செய் யும் பொருளாதாரம் தான், நமக்கு தேவை என்றும் ஒரு சில முத லாளிகளுக்கு வேலை செய்யும் பொருளாதா ரம் தேவையில்லை என்றும் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலை தளப்பதி வில் கூறியுள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எ.நாகராசன் எம்.சி. தலைமையில்

கொளத்தூர் மேற்குப் பகுதி சார்பில் 'செம்மொழி நாள்' மாபெரும் புகழரங்கம்!

சுகிசிவம் – பாரதி பாஸ்கர் – கவிஞர் கவிதா ஜவகர் புகழுரை!

சென்னை, ஜூன்.7-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, கொளத் தூர் மேற்கு பகுதி சார்பில், ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் "செம் மொழி நாள்" விழாவை முன்னிட்டு மாபெரும் புக ழரங்கம் - சொல்வேந்தர் சுகிசிவம் - கலைஞரின் பேனா, திருமதி.பாரதி பாஸ்கர் - கலைஞரின் வச னம், கவிஞர்.கவிதா ஜவகர் -கலைஞரின் கம்பீரம் எனும் தலைப்பில் புகழு ரைத்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, கொளத் தூர் மேற்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம் மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி 2" கருத்தால் உயர்ந்த அறிஞர்! காலத்தை வென்ற கலைஞர்! எனும் தலைப்பில் மாபெரும் புகழ ரங்கம் 06/06/25 வெள்ளிக் கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, அரிச்சந்திரா மைதானத்தில் நடைபெற்றது

இப்புகழரங்கத்தில் கொளத்தூர் மேற்கு பகுதி கழக செயலாளர் திரு.எ.நாக ராசன் எம்.சி தலைமை வகித்தனர். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச் சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஐ.சி.எப்.வ.முர ளிதரன், சி.மகேஷ்குமார், கே.சந்துரு, சரிதாமகேஷ்கு மார், வானவில் விஜய், தேவஜவஹர், எஸ்.பன்னீர் செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ம.அசோக் குமார், ஆர்.எஸ்.சித்திக் முன்னிலை வகித்தனர்.

இரா.தயாளன், எம்.சாக் ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, கொளத்தூர் மேற்கு பகதி வட்ட கழக செயலாளர் கள்: எஸ்.முருகன், ப.அதி பதி, எம்.ஜே.சி.பாபு, என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.ராமச்சந்திரன். மாமன்ற உறுப்பினர்கள்: எம்.தாவூத்பீ, சி.ஸ்ரீதணி, டி.யோகபிரியா, வி.அமுதா ஆகியோர் வரவேற்றனர்.

இம்மாபெரும் புகழரங் கத்தில் சொல்வேந்தர் சுகி சிவம் - கலைஞரின் பேனா, திருமதி.பாரதி பாஸ்கர் - கலைஞரின் வசனம், கவி ஞர்.கவிதா ஜவகர் -கலைஞ ரின் கம்பீரம் எனும் தலைப்பில் புகழுரைத்தனர்.

மேலும், இப்புகழரங்கத் தில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், டாக் டர்.கலாநிதிவீராசாமி எம்.பி, மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.ரவிச்சந்திரன் சங்க ரிநாராயணன் கவிஞர். நன் மாறன் இந்திரஜித். மாவட்ட நிர்வாகிகள்: கோ புனிதவதிஎத்திராசன் பகுதி கழக நிர்வாகிகள்: எம்.சாமி கண்ணு பொதுக்குழு உறுப் பினர்கள்: அணிகளின் அமைப்பாளர்கள்: ப.ஜெக தீஷ் ஜெ.பாலமுருகன் வானவில்விஜய். சுதாதீன தயாளன் ராஜேஸ்வரிஸ்ரீதர் டாக்டர்.சாந்தகுமாரி, ஜி. வி.நாகவள்ளி LPF.மோகன் இரா.வீரமணி. கொளத்தூர் கிழக்கு பகுதி நிர்வாகிகள்: பி.பழனி இள.இளங்கோ வன் எஸ்.கே.ரமேஷ் எல். டி.தாமஸ்.

கொளத்தூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலா ளர்கள்: பா.அன்பரசு டி.சந் திரசேகர் ந.பொன்முடி கே.ஜார்ஜ்குமார் PTC.ரவி பி.ஊமைதுரை கே.பி.ஆத வன்மணி, கொளத்தூர் மேற்கு, கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: கன் னியப்பன் ஆர்.ஆரோக்கிய தாஸ் எம்.நாகராஜ் ஜெ.சர வணன் டி.எ.ராஜன், ஆர். ஜே.வெங்கடமூர்த்தி என். ரவிச்சந்திரன், ஆர்.சொக்க லிங்கம் ஆர்.மோகனசுந்த ரம் எஸ்.சம்பத்குமார் எ. எம்.ராஜசேகர் எஸ்.டி.பாஸ் கர் க.விஜயரங்கம் எஸ். பி.சதீஷ்குமார் பொன்.புக ழேந்தி கோ.பொன்னி வள வன் பி.வெங்கடேசன் எம். துளசி எஸ்.முரளி கோ.ராம கிருஷ்ணன் கே.சந்தானம் ஜி.செல்வம் சி.சந்திரசேகர்,

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள்: M.வர்கீஸ் M.R.சுரேஷ் ப.சர வணன் M.வீரேந்திரா நந்தா A.G.செந்தமிழ்செல்வம் J.ஆனந்த் PTC.ரமேஷ் அருண் மனோகர், ஜிம் ஸ்ரீதர் 5.கிருபாகரன் ரமேஷ் பாபு R.S.ரபீக் S.P.மனோஜ் ராமசந்திரன் தன்ராஜ் ரவி பாபு B.அல்விராஜன் உ. தேவராஜ், தாவூத் B. போத்தா S.சக்திவேல் G.S. ஆனந்த் M.இளமுருகு சுரேஷ்குமார் V.வளர்மதி S.லட்சுமி சாந்தி K.S.சபரி நாத், K.கங்காதரன் C.V. யோகராஜ் ஆ.சு.அசோக்கு மார் துளசிகுருபரன் சொ. பழனி S.மதன் V.J.கஜேந்தி ரன் K.ஜெயபால், N.வேலன் G.S.பிரகாஷ் P.பாஸ்கர் பிர வீன்சேட் S.D.சீனிவாசன் G.லட்சுமணன் S.சுகுமார் A.இஸ்மாயில் இ.சிவா சு. சி.ராஜ், .தினேஷ் பிரகாஷ் துரைவெங்கடேசன் பானு சதீஷ் கௌரிகுருபரன் விஜ யலட்சுமி பிரியா இ.விக் னேஷ், K.J.சுவாதி.

கொளத்தூர் மேற்கு பகுதி அணிகளின் நிர்வாகி கள்: N.திலிப்குமார் நா.முத் துவேல் எச்.மனோதீபன் மோகன்சுந்தர் எம்.அழ கேஷ் ப.அஸ்வின் வி. தினேஷ் ரா.கவிதா S.சந்திர கலா P.கலைவாணி. கொளத்தூர் மேற்கு பகுதி இளைஞர் அணி நிர்வாகி கள்: ஆர்.இளங்கோ தி.நிர் மல் ஜீ.பிரபாகரன் ம.சரண் ராஜ் மு.தாவுத்உசேன் தி. கணேஷ் .கிளமெண்ட் சிரில் க.மோகன், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி நிர்வாகிகள் ப. அஸ்வின் வி.தினேஷ் ரா. கவிதா. கொளத்தூர் மேற்கு பகுதி மாணவர் அணி நிர் வாகிகள் R.ஹரிகிருஷ்ணன் D.சுகேஷ் S.நவீன் M.நந்தா S.சீனிவாசன் ப.லோகேஷ் N.மகேஷ் M.சதீஷ்குமார். கொளத்தூர் மேற்கு விளை யாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் K.முருகன் M.முத்து N.பிரசாத் V. முகேஷ் B.ரோஹித்பாபு K. ரஞ்சித்குமார் K.சர்வின் நந்தா M.சரவணன், கொளத் தூர் மேற்கு பகுதி தகவல் ஆதிதிராவிட நலக்குழு நிர் வாகிகள் KGF.சுரேஷ் V. வெங்கடேசன் சந்திரமோ கன் கார்த்திக் T.ராஜாபிர காஷ் ஆகியோர் சிறப்பித்த னர்.

வட்ட கழக செயலாளர் M.D.தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார்.

வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில் புதிய படப்பை மேம்பாலத்தை கழக மக்களவைக் கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு முன்னிலையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., படப்பை ஆ.மனோகரன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

படப்பை பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க

வண்டலூர் - வாலாஜா சாலையில் புதிய மேம்பாலம்!

மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு முன்னிலையில் அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

படப்பை, ஜூன் 7- வண்டலூர் - வாலாஜா பாத் சாலையில் புதிய படப்பை மேம்பாலத்தை மக்களவைக் குழுத் தலை வர் டி.ஆர்.பாலு முன்னி லையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்.

முக்கியமான வண்டலூர் - வாலாஜாபாத் மாநில நெடுஞ்சாலை (34 கி.மீ நீளம்) தற்போது 6 வழிசா லையாக விரிவாக்கம் செய் யப்பட்டுள்ளது.

இச்சாலையில் அமைந் துள்ள ஒரகடம் சிப்காட் தொழில்துறை பூங்காவில் நிசான், அப்பல்லோ டயர்ஸ், ஆல்ஸ்டோம், J&D, இன் பெக் இந்தியா போன்ற முன்னணி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இதன் காரணமாக, படப்பை பகுதியில் உள் ளூர் மற்றும் கனரக வாக னங்கள் கூடுதல் எண்ணிக் கையில் இயக்கப்படுவதால் போக்குவரத்து நெரிசல் அதி கமாக காணப்பட்டுவந்தது.

இந்த நெரிசலை குறைக் கும் நோக்கில், 2019ஆம் ஆண்டு ரூ.26 கோடி மதிப் பீட்டில் மேம்பாலம் அமைக்கும் அரசாணை வெளியிடப்பட்டது.

தொடர்ந்து அரசின் ஆய்வு கூட்டங்கள் மற்றும் திட்ட முன்னெடுப்புகள் செயல்படுத்தப்பட்டு, 16 நவம்பர் 2021 அன்று ஒப்பந் தம் இறுதி செய்யப்பட்டு பணிகள் துவக்கப்பட்டன.

பணிகள் நிறைவு பெறும் நிலையில் மின் கம்பங்கள் மற்றும் பிற பயன்பாட்டு வசதிகளை மாற்றும் பணி கள், பேருந்து நிறுத்த இட மாற்றம் போன்ற இடையூ றுகள் தீர்க்கப்பட்டு, மேம்பாலம் தற்போது முழு மையாக கட்டி முடிக்கப்பட்டு பொதுமக் கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், படப்பை பகுதியில் போக்குவரத்து நெரிசல் கணிசமாக குறை யும். மேலும், சாலமங்கலம், ஆரம்பாக்கம், மண்ணிவாக் கம் மற்றும் கரசங்கல் உள் ளிட்ட பகுதிகளில் வசிக் கும் பொதுமக்களுக்கு இது மிகுந்த நன்மை பயக்கும்.

மேம்பாலத்தின் முக்கிய விவரங்கள்:

நீளம்: 700 மீட்டர், அக லம்: 17 மீட்டர் (4 வழி சாலை), கண்கள் (Spans): 11

இந்த புதிய மேம்பாலம் திறக்கப்படுவதால், வண்ட லூர் - வாலாஜாபாத் சாலை வழியாக பயணிக்கும் பொதுமக்களுக்கு பாதுகாப் பானவும், சீரானவும் பயண அனுபவம் கிடைக்கும்.

இந்நிகழ்ச்சியில் அமைச் சர் தா.மோ. அன்பரசன், கு. செல்வப்பெருந்தகை எம். எல்.ஏ., படப்பை ஆ. மனோகரன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

பெண்ணையாறு நதிநீர் பங்கீடு தொடர்பாக தீர்ப்பாயம் அமைத்திடுவீர்!

ஒன்றிய அரசுக்கு - தமிழ்நாடு அரசு கோரிக்கை!

சென்னை, ஜீன் 7– பெண்ணையாறு நதிநீர் பங்கீடு தொடர்பாக தீர்ப்பாயம் அமைக்கு மாறு ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் கர்நாடகா இடையே பெண்ணையாறு நதி நீரை பங்கீடுவதில் உடன்பாடு ஏற் படாமல் இருந்து வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக, ஒன்றிய நீர் வளத்துறை அமைச்சர் சி.ஆர்.பாட் டீலை, தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் டெல்லி யில் அண்மையில் சந்தித்து ஆலோ சனை நடத்தினார். கர்நாடக ஆற் றின் மீதும் அதன் துணை நதியான மார்க்கண்டேய நதி மீதும் உள்ள திட்டங்கள், 1892 மற்றும் 1933 ஆம் ஆண்டு களில் மெட்ராஸ் மைசூர் ஒப்பந்தங் களை மீறுவதாக அமைந்துள்ள தாக, இதன் காரண மாக தமிழ் நாட்டின் நலன்கள் பாதிக்கப்படுவ தாக, தமிழ்நாடு அரசு தொடர்ந்து வாதிட்டு வருகிறது. உச் சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து இரு மாநிலங்களின் தரப்பில் சார்பில் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை குழுக்கள் அமைக்கப்பட்ட போதி லும், இந்த விவகாரத்தில் தீர்வு ஏற் படவில்லை என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

எனவே, உச்சநீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைப்படி, இந்த பிரச்சினைக்கு ஒரே தீர்வு தீர்ப்பாயம் அமைப்பதே என்று ஒன் றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி லஷ்மிபுரம் முன்னாள் கிளை செயலாளர் எஸ் சிவப்பிரகாசம் (எ) ராசா அவர்களின் மகள் லட்சுமி பிரியா – சுரேந்தர் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் மண்டல குழு தலைவர் எஸ்.நந்த கோபால், டி.சுந்தரம், குட்டி மோகன், மாமன்ற உறுப்பினர்கள் எம். குணசுந்தரி, திருமலை துரைசாமி, புத்தகரம் ஏழுமலை, எம்.சரவணன், ஜி.ஜே. தசரதன், ஜி.எஸ்.பிரபா, கே.நரேந்திரன், கே.சம்பத், ரயில்வே ஸ்ரீதர், டி.வி.எஸ். கோபி, எஸ்.என். கோதண்டன், அபிப் ரகுமான், வி.பாஸ்கர், பிஎஸ்என்எல் கவி, பிரியா, தயாளன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.